31st March 1969]

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி: போட்டு நான்கைந்து நாட்களில் fuse ஆக வேண்டுமென்ற தேவையில்லை. அப்படிப்பட்ட நிலையிருக்காது. பல்புகள் பற்றுக்குறை இருக்கிறது என்பதைப் பற்றி பல புகார்கள் அரசுக்கு வந்ததன் பேரில் மின்சார வாரிய தலைமைப் பொறியாளரிடத்தில் கலந்து பேசப்பட்டது. அதன்படி நகராட்சி மன்றங்களில் அப்படித் தேவையேற்பட்டால் வாரியத்தின் மூலமாக கொடுக்கலாம். அத்துடன் நகராட்சி மன்றங்களில் பல்புகளை வாங்கி இருப்பில் வைத்துக் கொண்டு தேவைப்படும்போது மின்சார வாரியத்தின் மூலமாகப் பயன்படுத்தலாம் என்றும் வைக்கப்பட்டது. அதைப்போல மின்சார வாரியம் ஊராட்சி மன்றங்களுக்கும் கொடுக்கமுடியுமா என்று கிராம வளர்ச்சி இயக்குனரை ஆலோசனை கேட்டபொழுது கொடுக்கலாம் என்று கூறினார்கள். மின்சார வாரிய செயலாளருக்கு எழுதப்பட்டு இருக்கிறது. பதில் வந்த பிறகு அந்தக் குறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

Elementary School, Thiruvenganur

* 351 Q.—THIRU T. K. SUBBIAH: Will the Hon. the Minister for Local Administration be pleased to state the plan and estimated expenditure of the building under construction for Elementary School in Thiruvenganur Village of Thirumanur Panchayat Union?

ஆரம்பப் பள்ளி, திருவெங்கனூர்

திரு. டி. கே. சுப்பையா: மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

திருமானூர் பஞ்சாயத்து ஒன்றிப்பிலுள்ள திருவெங்கனூர் கிராமத்தில், ஆரம்ப பள்ளிக்காகக் கட்டப்படும் கட்டிடம், எந்த திட்டத்தில் எவ்வளவு தொகையில் கட்டப்படுகிறது?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி: திருமானூர் பஞ்சாயத்து ஒன்றிப்பிலுள்ள திருவெங்கனூர் கிராமத்தில் ஆரம்பப் பள்ளிக்காக கட்டப்படும் கட்டிடம், கிராமப் பணிகள் திட்டத்தின்கீழ் ரூபாய் 10,000 மதிப்பீட்டில் கட்டப்படுகிறது.

திரு. டி. கே. சுப்பையா: கிராமப் பணித் திட்டம் என்பதிலிருந்து அது பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து அல்லது மானியத்திலிருந்து கட்டப்பட்டதா அல்லது சீரணிப்படை நிதியிலிருந்து அந்தப் பள்ளி கட்டப்படுகிறதா?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி: ஏற்கனவே கேள்விக்குக் கொடுத்த பதிலில் திருமானூர் பஞ்சாயத்து ஒன்றிப்பிலுள்ள திருவெங்கனூர் கிராமத்தில் ஆரம்பப் பள்ளிக்காக கட்டப்படும் கட்டிடம் கிராமப் பணிகள் திட்டத்தின் கீழ் 10,000 மதிப்பீட்டில் கட்டப்படுகிறது என்றுதான் இருக்கிறது. சீரணியின் மூலமாக என்று இல்லை. கிராமப் பணி மூலமாகக் கட்டப்படுவதற்கு ரூ. 4,000 அரசாங்கம் வழங்குகிறது. மீதி ரூ. 6,000-ஐ அந்தப் பகுதியிலுள்ள பொது மக்கள் நன்கொடையாக வழங்கி கட்டிடத்தைக் கட்ட வேண்டும். ஒரு வேளை கட்டுவதற்கு சீரணியினரைப் பயன்படுத்தியிருந்தால் இருக்கலாம். அதைப்பற்றிய விவரம் இல்லை. கட்டிடம் முடியும் நிலையில் இருக்கிறது.

Tamil Nadu Power-loom Weavers' Association

* 352 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether the Government have received any representation from the Tamil Nadu Power-loom Weavers' Association, recently; and

(b) if so, the action taken thereon?

[31st March 1969

விசைத் தறியாளர் சங்கம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் —

(அ) தமிழக விசைத் தறியாளர் சங்கம் அண்மையில் ஏதேனும் கோரிக்கை அரசுக்கு அனுப்பியதா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் : (அ) ஆம். தொழிற்சாலைகள் சட்ட விதித்துறைகளின் கீழ் ஏற்கெனவே வராத விசைத்தறிகள், பிற நிறுவனங்களுக்கு இச்சட்டத்தின் விதித் துறைகளைப் பயன்படுத்தி 1967 செப்டம்பர் திங்களில் அரசு வெளியிட்ட அறிவிப்பை ரத்து செய்யுமாறு வேண்டி இச்சங்கம் அரசுக்கு முறையீடு ஒன்றை அனுப்பியது.

(இ) மேற்சொன்ன முறையீடும், அதேபோன்ற முறையீடுகளும் ஆய்வு செய்யப்பட்டு வருகையில், அரசு வெளியிட்ட அறிவிப்பு செல்திற னற்றது என்று சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இந்த ரிட் மனுவை உயர்நீதி மன்றம் இன்னும் விசா ரித்து முடிவு செய்யவில்லை. ஆயினும், ரிட் மனுவின்மீது ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரை மேற்சொன்ன அறிவிப்பு செயல்படுவதை நிறுத்தி வைக்குமாறு உயர்நீதி மன்றம் கட்டளையிட்டுள்ளது. அரசு இது குறித்து உயர்நீதி மன்றத்தின் ஆணைகளை எதிர்பார்க்கின்றது.

Tamil Nadu State Transport Department Fares

*353 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether the Government are aware of the fact that the fares charged in Private Express Buses starting from Madras are lesser than those charged in the Express Buses of the Tamil Nadu State Transport Department; and

(*b*) if so, the reason for not reducing the fares of the Express Buses of the Tamil Nadu State Transport Department?

அரசு போக்குவரத்துத் துறை பேருந்து கட்டணம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்

(அ) சென்னையிலிருந்து புறப்படும் தனியார் விரைவு பேருந்துகளில் கட்டணம் தமிழக அரசு போக்குவரத்து விரைவு பேருந்துகளின் கட்ட ணத்தைவிட குறைவாக இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆமெனில், தமிழக அரசு போக்குவரத்துத் துறையின் விரைவுப் பேருந்திற்கான கட்டணத்தைக் குறைக்காத காரணமென்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு போக்குவரத்துத் துறை நெடுந்தொலை வழித்தடங் களில் சீர் வசதி (**Luxury Coaches**) பேருந்துகள் விரைவுப் பேருந்துக ளாக ஓட்டப்படுகின்றன.

Accident to a State Transport Bus

*354 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether a boy drove the Tamil Nadu State Transport bus parked near Jayankondam in May 1968;

(*b*) the damage caused due to the incident;